முழுப் பதிப்புரிமையுடையது.

தமிழ் மொழி Tamil Language தமிழ் மொழி Tamil Language தமிழ் மொழி Tamil Language தமிழ் மொழி Tamil Language தமிழ் மொழி Tamil Language தமிழ் மொழி Tamil Language தமிழ் மொழி Tamil Language தமிழ்

**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் (எம்பிலிபிட்டிய கல்வி வலயம்)**

**இடர்கால முகாமைத்துவ செயலட்டை : 01**

**ஜூலை** **2021** **[வாரம் : 01]**

**தரம் : 04** **தமிழ் மொழி**

**விடுகதைகள்**

**01) பின்வரும் விடுகதைகளுக்கான விடையை கண்டறிந்து எழுதுக.**

01. வெள்ளத்தாலும் போகாது. வெண் தணலிலும் வேகாது. கொள்ளையடிக்கவும் முடியாது. கொடுத்தாலும் குறையாது. அது என்ன?

.......................................................................................................

02. காற்று நுழைந்ததும் கானம் பாடுவான். அவன் யார்?

.......................................................................................................

03. தனித்தும் உண்ண முடியாது. இது சேராவிட்டாலும் உண்ண முடியாது. அது என்ன?

.......................................................................................................

04. வெட்டிக் கொள்வான். ஆனாலும் ஒட்டிக் கொள்வான். அவன் யார்?

.......................................................................................................

05. ஒட்டியவன் ஒருவன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன?

.......................................................................................................

06. ஏற்றி வைத்து அணைத்தால், எரியும் வரை மணக்கும். அது என்ன?

.......................................................................................................

07. தலையிலே கிரீடம் வைத்த தங்கப் பழம். அது என்ன?

.......................................................................................................

08. தலைக்குள் கண்கள் வைத்திருப்பவன், இவன் மட்டும் தான். அவன் யார்?

.......................................................................................................

09. கண்ணால் பார்க்கலாம். ஆனால், கைகளால் பிடிக்க முடியாது. அது என்ன?

.......................................................................................................

10. யாரும் தயாரிக்காத கதவு தானே திறந்து தானே மூடும். அது என்ன?

....................................................................................................

11. அடிக்கமாட்டான், திட்டமாட்டான், ஆனால் கண்ணீரை வரவழைப்பான் அவன் யார்?

....................................................................................................

12. கண்ணில் தென்படும் கையில் பிடிபடாது. அது என்ன?

....................................................................................................

| விடைகள் | | | |
|---|---|---|---|
| புல்லாங்குழல் | கடிதம் | கத்திரிக்கோல் | தேங்காய் |
| அன்னாசி | உப்பு | கண் இமை | கல்வி |
| வெங்காயம் | புகை | நிழல் | ஊதுவர்த்தி |

**02) இணைக்குக.**

| | |
|---|---|
| 01. கூவி அழைப்பான். கூடி உண்ணுவான். அவன் யார்? | பென்சில் |
| 02. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன? | தராசு |
| 03. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான். அவன் யார்? | கடிகாரம் |
| 04. செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள். அது என்ன? | சிரிப்பு |
| 05. இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுவான். அவன் யார்? | காகம் |
| 06. உயிரில்லாத நீதிபதி, ஒழுங்காய்த் தீர்ப்பு வழங்குகிறாள். அவள் யார்? | மாதுளை |
| 07. தலையைச் சீவினால் கறுப்பு. நாக்கை நீட்டுவான் அவன் யார்? | மெழுகுவர்த்தி |
| 08. உனக்குச் சொந்தமானது. ஆனால் உன்னை விட அதிகமாக மற்றவர்களே உபயோகிப்பர். அது என்ன? | பெயர் |

**03) நீங்கள் அறிந்த விடுகதைகள் ஐந்தினை அப்பியாசக் கொப்பியில் எழுதுக.**